

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2054 | மார்ச் 23, 2023 | புரட்சி 22 | முழக்கம் 10 | விலை: ரூ.3.00




- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆ. இராசா, பாலபிரஜாபதி அடிகளார், வன்னிஅரசு, மதுக்கூர் ராமலிங்கம், மருத்துவர் எழிலன், சுந்தரவள்ளி உள்ளிட்ட பல்வேறு சிந்தனையாளர்கள் மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.
- அண்ணா தீட்டிய ‘சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்’ பொம்மலாட்டம்; புரட்சிகர கலை நிகழ்ச்சிகள்; திரிபுவாதங்களைத் தோலுரிக்கும் கருத்தரங்குகள்

# சேலம் மாநாடு எழுச்சி; மக்கள் பேராதரவு, களப்பணிகளில் தோழர்கள் உற்சாகம்

சேலத்தில் ஏப். 29, 30 தேதிகளில் கழகம் நடத்தவிருக்கும் சனாதன சக்திகளே, தமிழகத்தில் நீங்கள் காலூன்ற முடியாது என்று எச்சரிக்கும் இளைஞர்கள் மாநாட்டுக்கு மக்களிடையே பேராதரவு கிடைத்து வருகிறது. ‘கருப்பு – சிவப்பு – நீலம்’ என்று பெரியார் – அம்பேத்கர் – மார்க்சிஸ்ட் சிந்தனையாளர்கள் இணைந்து சனாதன எதிர்ப்பில் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதை எதிரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கும் மாநாடாக திராவிடர் விடுதலைக் கழகம் ஒழுங்கு செய்துள்ளது; இது காலத்தின் தேவை!

மாநாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. இராசா, விடுதலை சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு, தீக்கதிர் ஆசிரியர் மதுக்கூர் இராமலிங்கம், வைகுண்டர் வழி வந்த பால பிராஜாபதி அடிகள் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள், சிந்தனையாளர்கள் பங்கேற்கிறார்கள். கருத்தரங்குகளில் பங்கேற்று உரையாற்றுவோர் பெரும்பாலும் துடிப்பு மிக்க இளைய தலைமுறை.

- பேறிஞர் அண்ணா எழுதி, அவரே காகப்பட்டர் வேடம் ஏந்தி நடித்த ‘இந்து கண்ட சாம்ராஜ்யம்’ வரலாற்று நாடகத்தை பொம்மலாட்டக் கலை வழியாக மு. கலைவாணன் குழுவினர் நிகழ்த்துகிறார்கள். இதில் நடித்த சிவாஜி கணேசன் நடிப்பைப் பாராட்டி அவருக்கு பெரியார் தந்ததுதான் ‘சிவாஜி’ பட்டம்.
- புதுவை விடுதலைக் குரல், மக்கள் கலை இலக்கிய மய்யக் குழு சார்பில் கோவன் புரட்சிகர இசைக் குழு, நாடகம், பாடல் வழியாக கலை நிகழ்ச்சிகளை நடத்தும் விரட்டுக் குழு, கலைக் குழு, மேட்டூர் கழகத் தோழர்களின் டி.கே.ஆர். இசைக் குழுவின் கலை நிகழ்ச்சிகள் இரண்டு நாள் மாநாடுகளிலும் எழுச்சியூட்டத் தயாராகி வருகிறது.

மாநாட்டில் கருத்தரங்கம், உரை வீச்சு, ஆய்வரங்குகளில் பங்கேற்று இளம் தலைமுறை தனது செறிவான கருத்துகளை முன்வைக்கப் போகிறது. கழகக் குடும்பத்தின் பெரியாரிய விழுதுகள் நடத்தும் கலை நிகழ்ச்சிகளும் உண்டு. இடைவிடாமல் இரண்டு நாள்களும் இடைவின்றி அரங்கத்தை சூடேற்றி சனாதன பார்ப்பன சக்திகளுக்கு எச்சரிக்கை விடுக்க ஓயாத பணிகளுடன் களமிறங்கி விட்டனர் கழகத் தோழர்கள்.

- சென்னை, கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, பழனி, மேட்டுப் பாளையம், ஆனைமலை உள்ளிட்ட பல ஊர்களில் தோழர்கள் விடிய விடிய சுவரெழுத்துகளை எழுதி வருகின்றனர். பணிகளைத் தொடங்காத ஏனைய ஊர்களிலும் விரைவில் சுவரெழுத்துகளைத் தொடங்க தோழர்கள் ஆயத்தமாகி வருகிறார்கள்.
- மக்களிடம் கடைகடையாக வீதி வீதியாகச் சென்று தோழர்கள் மாநாட்டுக்கு நிதி வசூல் செய்கிறார்கள். மலர்ந்த முகத்துடன் மக்கள் வரவேற்கிறார்கள். பேரணி மாநாட்டின் முத்தாய்ப்பாக இருக்கும். பல்லாயிரக்கணக்கில் சீருடையுடன் இளைஞர்கள் – பெண்களும், ஆண்களும் அணிவகுத்து வரும் காட்சிகளை கற்பனையில் நினைத்துப் பார்த்தாலே மெய்சிலிர்க்கிறது.
- கொளத்தூர், நங்கவள்ளி, உக்கம்பரத்திக்காடு, ஏற்காடு, காவலாண்டியூர், கண்ணாமூச்சி, தாராமங்கலம் பகுதிகளில் தோழர்கள் தீவிரமாக மாநாட்டு துண்டறிக்கைகளை வழங்கி, மக்களிடம் நிதி திரட்டி வருகின்றனர்.

இது வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடு; திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் இரண்டு நாள் மாநாடு.

நட்பு சக்திகளுடன் இணைந்து சனாதன பார்ப்பனியத்துக்கு எச்சரிக்கை விடுக்கும் மாநாடு. தோழர்களே, மாநாட்டுப் பணிகளைத் தொடங்குவீர்!

***திராவிடர் இலட்சியம் வெல்லும்;***
***திராவிட மாடல் அதை சொல்லும்!***

## சுவரெழுத்துப் பணியில் உற்சாக மூட்டிய நிகழ்வு

*15.3.2023 மதியம் சூலூர் வழி பல்லடம் சாலையில் ஒரு சுவரில் சுவரெழுத்து விளம்பரம் எழுதிக் கொண்டிருக்கும் போது அதன் வழியாக நூற்றுக்கணக்கான வாகனங்கள் சென்று கொண்டே இருந்தன. அப்படிச் சென்ற ஒரு இருசக்கர வாகனம் சுவரெழுத்து விளம்பரத்தைக் கடந்து சென்றது. மீண்டும் திரும்பி வந்தது. நீங்கள் திக வா என்றார்; திவிக என்றோம்.*

*“ஓகே ஓகே நீங்கள் எங்கள் அனைத்து ஜாதி அர்ச்சகர் உரிமைக்காக தொடர்ந்து போராடறீங்க; துணை நிற்கறீங்க; கொஞ்ச நாளுக்கு முன்னால் கூட உங்க சென்னை தோழர்கள் எங்கள் பொறுப்பாளர் அரங்கநாதனை மேடையில் ஏற்றி பாராட்டுனாங்க. ஆர்ப்பாட்டத்திற்கு கூப்பிட்டு பேச வைத்தீர்கள்; தொடர்ந்து எங்களுக்காக போராட்டங்களை நடத்துறீங்க. உங்கள் இதழில் எங்கள் உரிமைகளைப் பற்றி எழுதறீங்க; எனக்கும் இதழ் அனுப்புங்க; சந்தா தருகின்றேன்” பெருமிதத்துடன் கூறினார்.*

*“நான் அனைத்து ஜாதியினர் அர்ச்சகர் பயிற்சி முடித்தவன். இப்போ 2 அர்ச்சகரை நீக்கம் பண்ணியிருக்காங்க, கொடுமை. ஆனா அந்த வழக்கில் நாங்க தான் ஜெயிப்போம். முதல்வர் ஸ்டாலின் உறுதியாக உள்ளார்” என்று பேசிவிட்டுச் சென்றவர் மீண்டும் திரும்பி வந்தார்.*

*சுவரெழுத்தாளர் அய்யனார், சூலூர் பன்னீர்செல்வம், சூலூர் தமிழ்ச்செல்வி, உக்கடம் கிருஷ்ணன், நிர்மல் குமாரை உரிமையுடன் அழைத்துச் சென்று இளநீர் குடிங்க என்று வாங்கிக் கொடுத்துவிட்டுச் சென்றார்.*

*இரண்டு நாட்களாக கடும் வெயிலில் சுவரெழுத்துப் பணி நடந்து வருகிறது; வெயில் சுட்டது; சோர்வும் அவ்வப்போது வந்தது. ஆனால் தோழர் வாங்கிக் கொடுத்த இளநீர் குளிர்ச்சியைக் கொடுத்தது; புத்துணர்ச்சியைக் கொடுத்தது.*

**தகவல் : நிர்மல்**

தலையங்கம்

## திராவிட மாடலைப் பறைசாற்றும் ‘பட்ஜெட்’

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை தமிழக நிதியமைச்சர் மார்ச் 20ஆம் தேதி சட்டமன்றத்தில் தாக்கல் செய்து அனைவரது பாராட்டுகளையும் பெற்றிருக்கிறார்.

நடப்பது திராவிட மாடல் ஆட்சி என்பதற்கு மேலும் ஒரு சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. இதில் குறை காணுவதற்கு ஏதும் இல்லாமல் ‘பூத’க் கண்ணாடியை வைத்து தேடிக் கொண்டிருக்கின்றன எதிர்கட்சிகள்.

மகளிருக்கு மாதம் 1000 ரூபாய் வழங்குகின்ற திட்டத்தை அறிவித்தீர்களே செய்தீர்களா என்ற ஒரு கேள்வியைத்தான் திமுக ஆட்சியைப் பார்த்து இதுவரை அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கேட்டுக் கொண்டே வந்தன. அவர்களை வாயடைத்து பதில் கூற முடியாத அளவிற்கு அந்தத் திட்டத்தை இப்போது அறிவித்திருக்கிறது தமிழ்நாடு அரசு. மகளிருக்கு உரிமைத் தொகை 1000 ரூபாய் வழங்கும் திட்டம் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தொகை உண்மையில் விளிம்பு நிலை மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். வசதி படைத்த மாத வருவாய் வரக்கூடிய பெண்களுக்கு தேவையில்லை என்பதே நமது கருத்து. அந்த அடிப்படையில் தகுதி வாய்ந்த குடும்பங்களின் குடும்பத் தலைவிகளுக்கு மட்டும் இந்த உரிமைத் தொகை வழங்கப்படும் என்று அரசு எடுத்திருப்பது சரியான முடிவு. இத்திட்டத்துக்கு ‘உரிமைத் தொகை’ என்று பெயர் சூட்டப்பட்டிருப்பது சுயமரியாதையின் அடையாளமாகும்.

இல்லப் பராமரிப்பு, சமையல், குழந்தை வளர்த்தல் உள்ளிட்ட அனைத்து உழைப்புகளையும் சுமக்கும் பெண்களுக்கு எந்த ஊதியமும் இல்லாததோடு வெறும் ‘குடும்ப வேலைக்காரர்’ சும்மாதான் இருக்கிறார் என்ற இழிபட்டங்களைச் சமூகம் சுமத்துகிறது. இதைத் தகர்க்கும் சுயமரியாதைச் சொற்றொடர்தான் உரிமைத் தொகை.

காலை சிற்றுண்டி திட்டம். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம் அமல்படுத்தப்பட்டப் பிறகு பல்வேறு பள்ளிகளில் துவக்கப் பள்ளிகளில் பள்ளிக்கு வருகை தருகின்ற மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கை கணிசமாக அதிகரித்திருக்கிறது என்பதை அண்மையில் திட்டக்குழு ஆய்வுகள் வெளிப்படுத்தின. இப்போது அந்த திட்டம் மேலும் 18 லட்சம் பேர் பயனடையக்கூடிய வகையில் 30122 பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு ஐநூறு கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

மற்றொரு முக்கிய அம்சத்தையும் இதில் குறிப்பிட்டாக வேண்டும். அண்மைக்காலமாக தமிழ் நாட்டின் அய்ஏ.எஸ். பிரதிநிதித்துவம் மிகவும் குறைந்து வருகிறது. வடநாட்டில் இதற்கென்று ஒரு மிகப் பெரிய சதித்திட்டம் அரங்கேற்றப்பட்டு வருகிறது. தமிழகத்தில் அய்ஏ.எஸ். தேர்வர்கள் எண்ணிக்கை குறைந்து வருவதை கவலையோடு கவனத்தில் கொண்ட தமிழக அரசு அதை சரி செய்வதற்கான திட்டம் ஒன்றை அறிவித்து இருக்கிறது. முதல் நிலை பயிற்சி பெறுகின்ற அய்ஏ.எஸ். தேர்வாளர்களுக்கு மாதம் 7500 ரூபாயும் அதில் தேர்ச்சி பெற்று முதன்மை நிலை தேர்வுக்கு போகின்றவர்களுக்கு மாதம் 25,000 ரூபாயும் வழங்கி தமிழகத்தினுடைய அய்ஏ.எஸ். பிரதிநிதிகளுடைய எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான ஒரு திட்டத்தை சமூக நீதிப் பார்வையில் அரசு கொண்டு வந்திருக்கிறது.

அம்பேத்கர் நூல்களை தமிழில் மொழிபெயர்ப்பதற்கு 5 கோடி ரூபாய். அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம் என்று அறிவிப்புகள் ஆட்சியின் சமூகநீதிப் பார்வையை உறுதிப்படுத்துகிறது. அனைத்து துறைகளிலும் இயங்கும் பள்ளிகளையும் அரசுப் பள்ளி கல்வித்துறையின் கீழ் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து பல்வேறு குழப்பங்களுக்கு, முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. வரும் ஜூன் மாதத்தோடு ஒன்றிய ஆட்சி ரேஷன் கடையில் வழங்குகின்ற உணவு மானியத்தை நிறுத்தப் போகிறது என்ற ஒரு செய்தி வந்திருக்கிற ஒரு சூழ்நிலையில் அந்த ஆபத்தை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்திற்கான மானியத்தை 10500 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து மக்களைக் காப்பாற்றுவதற்கான முன் முயற்சியில் தமிழக அரசு இப்போது இறங்கியிருக்கிறது.

மகளிர் தொழில் முனைவோருக்கான ஒரு திட்டம் துவங்கப்பட்டு இருக்கிறது. அதேபோல சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரத்தில் பெண்களை ஈடுபடுத்துவது; அதற்கு சுயநிதி குழுவினை பயன்படுத்துவது என்ற ஒரு திட்டமும் மிகச் சிறப்பான ஒரு திட்டமாக பட்ஜெட்டில் இடம்பெற்று இருக்கிறது. மதுரை, கோவை போன்ற நகரங்களில் மெட்ரோ ரயில் அமைக்கும் திட்டங்கள், பின்தங்கி இருக்கின்ற வடசென்னையை முன்னேற்றுவதற்கு ஆயிரம் கோடி ரூபாயில் திட்டங்கள். தமிழ்நாடெங்கும் புத்தகத் திருவிழாக்கள், இந்தி எதிர்ப்பில் வீரமரணமடைந்த தாளமுத்து நடராசனுக்கு நினைவிடம், மதுரையில் கலைஞர் நினைவு நூலகம் என்று அடுக்கடுக்கான சாதனைகளோடு பட்ஜெட்டை அறிவித்திருக்கிறது தமிழ்நாடு அரசு.

அனைத்துக்கும் மேலாக 62,000 கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறையை மிகச் சிறந்த நிதி நிர்வாகத்தின் வழியாக 30,000 கோடி ரூபாய் அளவுக்குக் குறைந்திருப்பது மகத்தான சாதனை.

மக்கள் நிச்சயம் இதை வரவேற்பார்கள்; மகிழ்வார்கள்; போற்றுவார்கள்.

‘திராவிட மாடலை’ப் பறைசாற்றும் நிதிநிலை அறிக்கை!

# புள்ளி விவரங்கள் கூறும் அதிர்ச்சித் தகவல்

## தேசிய மய வங்கிகளின் மேலாளர் பதவிகளில் 92 சதவீதம் பார்ப்பன உயர்ஜாதியினரே!

இந்தியாவில் பொதுத்துறை வங்கிகளின் உயர் பதவிகளில் ஆதிக்கம் செலுத்துபவர்களாக இப்போதும் பார்ப்பனர்களும் ,மேல் சாதியினருமே, இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த புள்ளி விவரங்கள் மிகவும் அதிர்ச்சி தருவதாக இருக்கின்றன. அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் கோ. கருணாநிதி. இந்திய வங்கிகளின் உயர்நிலைப் பதவிகளில் இருப்போர் சமூக ரீதியாக எந்தெந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற தகவலை கேட்டு பெற்று இருக்கிறார். அந்த தகவல்களின்படி தலைமை பொது மேலாளர், பொது மேலாளர் ஆகிய பதவிகளில் இருப்பவர்களில் 88% முதல் 92% வரை பார்ப்பன, உயர் சாதியைச் சேர்ந்தவர்கள். அதாவது பொதுப் பிரிவைச் சார்ந்தவர்கள். பொதுப் பிரிவைச் சார்ந்தவர்கள் என்றாலே அதில் பார்ப்பனர்களும், உயர் சாதிக்காரர்களும்தான் இருப்பார்கள். தமிழ்நாடு மட்டும் இதற்கு விதிவிலக்காகக் கூற முடியும். இந்தப் பிரிவில் ஓரளவு பிற்படுத்தப்பட்டோரும், தாழ்த்தப்பட்டோரும் வருகிறார்கள். ஏனைய மாநிலங்கள் அனைத்திலும் பொது போட்டி என்று சொல்லப்படுகிற பொதுப்பிரிவு உயர் சாதியினருக்காகவே தாரை வார்க்கப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் 147 தலைமை பொது மேலாளர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 135 பேர் அதாவது 92% பார்ப்பன உயர்சாதியைச் சேர்ந்தவர்கள். அடுத்து பொது மேலாளர் அந்த பதவிகளில் 667 பேர் இருக்கிறார்கள். அதில் 88 சதவீதம், அதாவது 588 பேர் பார்ப்பன, உயர்சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். துணைப் பொது மேலாளர் பதவிகளில் 81 சதவீதம் பேரும், இதே பிரிவினராகத்தான் இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர் வெறும் 8 சதவீதம் தான். உதவி பொது மேலாளர் பதவிகளில் 72 சதவீதம் பொதுப் பிரிவினரும் 14 சதவீதம் மட்டுமே பிற்படுத்தப்பட்டோரும் இருக்கிறார்கள்.

தலைமை மேலாளர் பதவிகளில் 61 சதவீதம் பொதுப் பிரிவினரும், பிற்படுத்தப்பட்டோர் 19 சதவீதமும் மட்டுமே இருக்கிறார்கள். பிற்படுத்தப்பட்டோர் நிலை இது என்று சொன்னால் பதவி உயர்விலும் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று சட்ட உரிமை பெற்ற எஸ்.சி., எஸ்.டி., பிரிவினரின் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்த்தால் அது மிக மோசமான நிலையில் இருக்கிறது. தலைமைப் பொது மேலாளர் பதவிகளில் தாழ்த்தப்பட்டவர்களை பொறுத்தவரை 6% பேர் மட்டுமே இருக்கிறார்கள். பொது மேலாளர் பதவிகளில் 8% பேர் மட்டுமே இருக்கிறார்கள். “தலைமை பொது மேலாளர் பதவிகளில் பழங்குடியினர் ஒருவர்கூட கிடையாது”. பொது மேலாளர் பதவிகளில் பழங்குடியினர் 2% பேர் மட்டுமே இருக்கிறார்கள். இதில் கொள்கை முடிவு எடுத்து செயல்படுத்தக்கூடிய அதிகாரம் படைத்த **scale four** என்ற மிக அதிகாரம் படைத்த பதவிகள் எல்லாம் எப்படி நிரப்பப்படுகிறது என்று சொன்னால் பெரும்பாலும் நேர்காணல் மூலமாக நிரப்பப்படுகிறது. அதில் செல்வாக்கு பெற்றவர்கள் ஏற்கனவே அதிகாரத்தில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்ற, பார்ப்பன ஆதிக்க சாதி கூட்டத்தை சேர்ந்தவர்கள்தான் நேர்காணலை முறை கேடாகப் பயன்படுத்தி, அந்தப் பதவிகளை தங்களுக்கானதாக மாற்றிக் கொள்கிறார்கள்.

குறிப்பாக, பேங்க் ஆஃப் பரோடா அதானியின் நிறுவனத்திற்கு கடன் தர தயார் என்று கூறுகிறது. அப்படி எதனால் கூறப்படுகிறது என்று சொன்னால் இந்த உயர் பதவிகளில் இருக்கின்றவர்கள், பார்ப்பனர்களாகவும், உயர்சாதிக்காரர்களாகவும், இருப்பதுதான். அவர்கள் பன்னாட்டு பனியா நிறுவனங்களோடு கூட்டு வைத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை சுரண்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். பெண்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் அதுவும் மிக மிக மோசமாக இருந்து கொண்டு இருக்கிறது. இட ஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் அதிகபட்சம். மிக மிக அதிகபட்சமாக உதவி மேலாளர் என்ற பதவிக்கு வருகிறார்கள். அதற்கு மேல் எந்த பதவியையும் அவர்களால் எட்டிப் பிடிக்க முடியவில்லை. எனவே, அனைத்து மட்டங்களிலும், இட ஒதுக்கீடு முறை, பின்பற்றியாக வேண்டும் என்ற ஒரு கொள்கை உருவாக்கப்பட்டால்தான் சமூக ஜனநாயகம் சமூக நீதி உள்ள ஒரு நாடாக இந்த நாடு அமைய முடியும். “குடியரசுத் தலைவராக பழங்குடி சமூகத்தைச் சார்ந்த ஒருவர் இருக்கிறார். ஆனால் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த எத்தனை பேர் இந்த உயர் பதவிகளில் இருக்கிறார்கள் என்று கேட்டால், வெட்கக்கேடாக இருக்கிறது”. “பிற்படுத்தப்பட்ட சமூகத்தை சேர்ந்தவர் மோடி என்கிறார்கள். ஆனால் அந்த மோடி ஆட்சி செய்யும் ஒரு நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர் உயர் பதவிகளில், இருக்கிறார்கள் என்று சொன்னால், நிலைமை மிக மிக மோசமாக இருக்கிறது.” மோடியின் பிரதமர் அலுவலகத்தில் இருக்கிற அதிகாரிகளிலேயே ஒருவர் கூட தாழ்த்தப்பட்டவரோ, பிற்படுத்தப்பட்டவரோ இல்லை என்ற தகவல்கள் ஏற்கனவே வெளிவந்து கொண்டு இருக்கின்றன. நாட்டினுடைய அதிகாரப் பிடி என்பது இன்னமும் பார்ப்பன, மேல்சாதி ஆதிக்கத்தில்தான் இருந்து கொண்டு இருக்கிறது. பார்ப்பனர்களுக்கு பதவி போய்விட்டது. பார்ப்பனர்கள் பாதித்து விட்டார்கள், பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எல்லா இடங்களையும் பிடித்து விட்டார்கள் என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறவர்கள், அவை எல்லாம் மாயமான கருத்து என்பதை இப்போதாவது புரிந்து கொள்ள வேண்டும். இத்தகவல்களை வெளிக்கொண்டு வந்து உண்மையை நாட்டுக்கு அம்பலப்படுத்திய பிற்படுத்தப்பட்டோர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளரான கோ. கருணாநிதி அவர்களை நாம் நிச்சயம் பாராட்ட வேண்டும்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை

# செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டிலேயே பெரியார் பட்டம் வந்து விட்டது!

***பிப்ரவரி 18, 2023 அன்று கோவை மாநகரக் கழகம் நடத்திய “1929 செங்கல்பட்டு முதல் சுயமரியாதை இயக்க மாநாடும், தமிழ் நாட்டு அரசியலும் கருத்தரங்க”த்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை. (சென்ற இதழ்த் தொடர்ச்சி)***

நம்முடைய நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழிலாளர்களின் முன்னேற்றமும் அவசியமான படியால் அவரவர்களின் வேலைக்குத் தகுந்தபடியும் அவர்கள் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய அளவு கூலி கொடுப்பதோடு ஒவ்வொரு தொழிலும் கிடைக்கும் இலாபத்தில் அந்தந்த தொழிலில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான பங்கு கொடுக்க வேண்டும் என்றும் இம் மாநாடு தீர்மானிக்கிறது. இது மாநாட்டுத் தீர்மானம்.

இதை கடைசி வரைக்கும் பெரியார் வலியுறுத்தி வந்தார். “நீங்கள் பணம் போட்டால் நான் என் உழைப்பைப் போடுகிறேன். நாம் இரண்டு பேரும் பங்காளிகள் என்று எப்போதாவது கம்யூனிஸ்டுகள் சொல்லியிருக்கிறீர்களா” என்று பெரியார் கேட்டார். “அவர்களுக்கு இலாபத்தில் வரும் பங்கை பிரித்துக் கொடு” என்றார்.

பெரியாருக்கு பெரியார் என்று யார் பட்டம் கொடுத்தது என்று பலரும் பலவித கருத்துக்களை தெரிவித்து வருகிறார்கள். ஆனால் சமூக முன்னேற்றத்திற்கு சமூக விடுதலைக்கும் சுயமரியாதை இயக்க கர்த்தாவாகிய **ஈ.வெ.ராமசாமிப் பெரியார்** அவர்கள் ஆற்றிய பெரும் பணிக்கு நன்றி பாராட்டுவதுடன் அவர் இவ்வியக்கத்திற்கு தலைமையேற்று நடத்துவதை அவர்பால் பூரண நம்பிக்கை உண்டு என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது என்று செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டிலேயே கடைசியாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. 1938இல் பெரியார் பட்டம் வழங்கப்பட்டது என்று கூறிக் கொள்கிறார்கள் ஆனால் 1929-லேயே ராமசாமிப் பெரியாருக்கு நன்றி தெரிவிக்கிறார்கள்.

1927 டிசம்பர் கடைசி ‘குடிஅரசு’ இதழில் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் என்பதை நீக்கி ஈ.வெ.ராமசாமி என்று குறிப்பிடுகிறார். நாகர்கோயிலைச் சேர்ந்த சிதம்பரம் பிள்ளை வழக்கறிஞர் எம்எல்ஏவாக இருந்தவர். ஆலய நுழைவுப் பற்றி நூலை எழுதியவர். அவர்தான் முதல் முறையாக 1928 தொடக்கத்திலேயே பெரியாரை ராமசாமிப் பெரியார் என்று எழுதுகிறார்.

அதற்குப் பின்னால் 21.7.1929 திருநெல்வேலி ஜில்லா இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் கலந்து கொண்ட தலைவர்கள் எல்லாம் பெரியார் என்றே அழைத்தனர். 1932 திருச்சி மருத்துவர் குல சங்கத்தார் வழங்கிய உபச்சார பத்திரத்தில் பெரியார் ஈ.வெ.ராமசாமி என்றும் குறிப்பிட்டுள்ளனர். இது திராவிடன் பத்திரிகையில் இடம் பெற்றுள்ளது. 1932 கொழும்பு நகரில் ஆதி திராவிடர் சங்கத்தார் வழங்கிய வரவேற்பில் ராமசாமிப் பெரியார் என்றும் கூறப்பட்டிருக்கிறது. எந்தெந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் பெரியார் என கூறப்பட்டிருக்கிறது என்பதை ஆனைமுத்து அவர்கள் தனது நூலில் எழுதியுள்ளார்.

நவம்பர் 30ஆம் தேதி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது தான் பெண்கள் மாநாடு நடைபெறுகிறது. அதில் பெரியார் சிறப்புரையாற்றுகிறார். மற்ற பேச்சாளர்கள் எல்லாம் பெண்கள் மட்டும் தான்.



அப்பொழுது மட்டுமில்லை, பெரியார் நடத்திய அனைத்து பெண்கள் மாநாடுகளிலும் பெண்கள் தான் பேசுவார்கள். பெரியார் இயக்கத்தில் அதைப்பற்றி மட்டுமே தனியாக சொல்ல வேண்டும். கொடியேற்றி வைப்பது எப்போதும் பெண்ணாகத்தான் இருப்பார், மாநாட்டுத் தொடக்கவுரை எப்போதும் பெண்களாகத்தான் இருப்பார்கள். சுயமரியாதை இயக்கத்தின் தொடக்கம் இப்படித்தான் நடந்தது.

“இந்தியாவில் இதுவரை தோன்றிய தலைவர்கள் செய்யாமல் போன வேலைகள் இன்று நமது தலைவர் ஈ.வெ.ராமசாமி செய்து வருவதாலும். தென்னாட்டில் அவருக்கு மேலாகவும் சமமாகவும் நினைப்பதற்கு வேறொருவர் இல்லாததாலும் அவர் பெயரை சொல்லிலும் எழுத்திலும் வழங்கும் போதெல்லாம் ‘பெரியார்’ என்று சிறப்புப்

- *சுயமரியாதை இயக்க மாநாடுகளில் சங்கீத மாநாடு நடத்தி, பார்ப்பனரல்லாத இசைக் கலைஞர்கள் பெயர்ப் பட்டியலை வெளியிட்டார் பெரியார்.*
- *பார்ப்பனரல்லாத பெண்கள் இசை நிகழ்ச்சி நடத்தும்போது ‘பெரிய மனிதர்கள்’ வருகையின்போது எழுந்து கும்பிட வேண்டும் என்ற அடிமை முறையை பெரியார் கண்டித்தார்; கும்பிடு போடாதீர்கள் என்றார்.*
- *கானாடு காத்தான் சண்முக செட்டியாரின் மகள் தான், திருமணத்தின்போது தாலிகட்ட வந்த மணமகனை ‘நிறுத்து; தாலி கட்ட விட மாட்டேன்’ என்று புரட்சி செய்தார்.*

பெயரையே வழங்குதல் வேண்டும் என்று இம் மாநாடு எல்லோரையும் கேட்டுக் கொள்கிறது”. இதுதான் பெண்கள் மாநாட்டுத் தீர்மானம். இதைத் தான் அந்த மாநாட்டில் பெரியார் பட்டம் கொடுத்தார்கள் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

திராவிடர் இயக்கத்தினுடைய தொடக்கம் பண்பாட்டு அமைப்பாக சுயமரியாதை இயக்கமும். அரசியல் அமைப்பாக நீதிக் கட்சியும் இருந்தது. அவர்கள் கொள்கைப் பிரகடனம் என்ற ஒன்றை அறிவித்தார்கள். அதில் ஜாதி என்பது கூடாது என்பதை கூறுகின்றார்கள். பழங்காலம் தொட்டு பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்ட பாரம்பரியம் இந்துக்களிடையே உயர்ந்த ஜாதி என்று கருதும் தன்மை, நிலையான நம்பிக்கை இவற்றை நூல் வழியாகவும். வாய்மொழியாகச் சொல்லி தாங்களே ஏனையோரை விட உயர்ந்தவர்கள். தாங்களே கடவுளின் பிரஜைகள் என்ற எண்ணத்தை உருவாக்கி விட்டனர்.

செங்கல்பட்டு மாநாட்டில் மற்றொரு தீர்மானம் போட்டார்கள். தாய்மொழி மற்றும் அரசு மொழியான ஆங்கிலம் ஆகிய இரண்டுக்கு மட்டுமே செலவு செய்ய வேண்டும் என்றும் பிறமொழிக்காக அரசு எந்த செலவும் செய்யக் கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள்.

அதைத் தொடர்ந்து பல மாநாடுகள் நடக்கிறது. சுயமரியாதை இயக்க முதல் மாநாட்டில் சங்கீத மாநாடு என்று ஒன்று நடக்கிறது. இந்த மாநாடு பார்ப்பனரல்லாத இசைக் கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக நடைபெற்றது. அவர்களுக்கு தனியாகவும் சில நேரம் ஒதுக்கப்படுகிறது. இரண்டாவது சுயமரியாதை இயக்க மாநாடு ஈரோட்டில் நடைபெறுகிறது. அதில் சங்கீத மாநாடு என்ற ஒன்றை அறிவிக்கிறார். பார்ப்பனரல்லாத இசைக்கலைஞர்கள் கலந்து கொண்டு பாட வேண்டும் என்று ஒரு வேண்டுகோள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைப் பேராசிரியராக இருந்த ஒருவரின் தலைமையில் அந்த மாநாடு நடைபெறுகிறது. அப்போது குடிஅரசு இதழ் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து வைத்துக் கொண்டு வருகிறது.

தயவுசெய்து உங்கள் வீட்டு நிகழ்ச்சிகளில் கச்சேரி வைத்தால் நம் ஆட்கள் கீழ்கண்ட துறைகளில் இருக்கிறார்கள் அவர்களின் பெயர்ப் பட்டியலைப் போட்டு இவர்களை அழையுங்கள் என்று கூறுகிறார். அவர்களுக்கும் ஒரு வேண்டுகோள் வைக்கிறார், நீங்கள் பாட்டுப் பாடும் போது எல்லோரையும் எழுந்து நின்று கும்பிட்டு விட்டு பாட்டு பாடக் கூடாது. அமர்ந்தே பாட வேண்டும்.

பார்ப்பான், பார்ப்பனரல்லாத கலைஞர்கள் பாடினால் சொல்லுவான் பாட்டில் சுதி கொஞ்சம் குறைவாக உள்ளது என்று சொல்லுவான்; பார்ப்பனராக இருந்தால் ஒன்றும் பாடவில்லை என்றாலும் பேஷ் பேஷ் என்று தலை ஆட்டுவான். நீங்கள் துணிச்சலாக இருங்கள் தன்னம்பிக்கையுடன் இருங்கள் சுயமரியாதையுடன் இருங்கள் வருகிறவனுக்கெல்லாம் எழுந்து நின்று வணக்கம் சொல்லாதீர்கள். குறிப்பாக இடுப்பில் துண்டை கட்டாதீர்கள் என்று சொல்லிவிட்டு தோளில் துண்டை போட்டுக் கொள் என்கிறார்.

தோளில் துண்டை போடுவதற்கு ஒரு பெரிய வரலாறு இருக்கிறது.

கானாடுகாத்தான் என்ற பகுதியில் சண்முகம் என்கிறவர் ஒரு பெரிய பணக்காரர். நாட்டுக் கோட்டை செட்டியார். சுயமரியாதை இயக்கத்தின் பொருளாளரும் அவர்தான். சேரன்மாதேவி குருகுலத்தை தொடங்குவதற்காக 31 ஏக்கர் நிலத்தை தனி ஒருவராக வாங்கிக் கொடுத்தவர். அந்த அளவு ஒரு பணக்காரர். அவர் வீட்டில் தான் அடிக்கடி சந்திப்புகள் நடக்கும். அவர் ஒரு மராட்டியப் பெண்மணியை சுயமரியாதை திருமணம் செய்தார்.

புரோகித ஒழிப்பு இயக்கம் என்ற ஒன்றை பெரியார் தொடங்கினார் அதில் அவரும் ஒரு உறுப்பினர். அவருடைய மகள் தான், மேடையில் திருமணம் நடக்கும் பொழுது தாலி கட்ட வருகிற மாப்பிள்ளையைப் பார்த்து “கட்டாதே நிறுத்து, நான் தாலி கட்டிக் கொள்ள மாட்டேன், மாலையை மட்டும் மாற்றிக் கொள்” என்கிறார்.

சபாஷ் பார்வதி என்று பாராட்டி பெரியார் எழுதியிருப்பார். அவர் சொல்கிறார் ஒன்று தாலி கட்டக்கூடாது, இல்லையேல் நானும் ஒரு தாலி கட்டுவேன் என்று கூறுகிறார் இது நடந்தது 1935 ஆம் ஆண்டு. வைசு சண்முகம் செட்டியார் அவர்களின் மகள் தான் அவர்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# அய்.அய்.டி.களில் 'சனாதனம்'



அய்.அய்.டி., அய்.அய்.அய்.எம். பார்ப்பன கூடாரங்களாகி விட்டன. அங்கே சமஸ்கிருதம் வேதம் கற்பிக்கப்படுகிறது. அம்பேத்கர், பெரியார் படிப்பு வட்டம் தடை செய்யப்படுகிறது. பார்ப்பன வேத பிரச்சாரங்கள், உபதேசம் செய்கிறார்கள்.

மாட்டிறைச்சி சாப்பிட்டால் தாக்குதலுக்கு உள்ளாகிறார்கள். சைவம், அசைவம் என்று உணவுக் கூடத்தில் பாகுபாடு. தலித் மாணவர்கள், பேராசிரியர்களாக இருக்கும் பார்ப்பனர்கள் தரும் இடையூறுகள் அவமதிப்புகளால் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

● மும்பை அய்.அய்.டி.யைச் சார்ந்த தலித் மாணவர் தர்ஷன் சோலங்கி விடுதியின் 7ஆவது மாடியிலிருந்து குதித்து அண்மையில் தற்கொலை செய்து கொண்டார்.

### 2014இல் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு என்ன நிலை?

● 2014 முதல் 2021 வரை அய்.அய்.டி., அய்.அய்.எம். மத்திய பல்கலைக் கழகங்களில் 122 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மக்களவையில் இது அரசு தாக்கல் செய்த அறிக்கையில் ஒப்புக் கொள்ளப்பட்ட தகவல். 122 பேரில் 24 மாணவர்கள் பட்டியல் இனப் பிரிவினர். 41 பேர் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர். பழங்குடி மற்றும் சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்தவர்கள் 3 பேர். இவை அனைத்தும் நிறுவனக் கொலைகளே!

தடைக் கற்களைத் தாண்டி உயர் கல்வியை எட்டிப் பிடிக்கும் விளிம்பு நிலை மாணவர்களை சனாதனம், பார்ப்பனியம் தடுக்கிறது; தற்கொலைக்குத் தூண்டுகிறது.

## மார்ட்டின் இல்ல மண விழா: கழக ஏட்டுக்கு நன்கொடை

மேட்டூர் கழகப் பொறுப்பாளர் மார்ட்டின் விஜயலட்சுமி இணையரின் மகள் அன்புக்கரசி - ஹமீது ஆகியோரின் ஜாதி - மத மறுப்பு மணவிழா மார்ச் 12, 2023 அன்று கள்ளக்குறிச்சியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.10,000/- நன்கொடை வழங்கப்பட் டுள்ளது. நன்றியுடன் பெற்றுக் கொண்டோம்.

## கழகத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள்!

மாநாடு தொடர்பாக சுவரெழுத்து, வசூல் பணிகள், மக்கள் காட்டும் ஆதரவு, அது தொடர்பான அமைப்புகளின் செயல்பாடுகளை உடனுக்குடன் கீழ்க்கண்ட எண்களுக்கு பகிரி (Whatsapp) வழியாக அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

பரிமளராசன் - 78719 62024
விஷ்ணு - 89733 41377

## கள்ளக்குறிச்சியில் 'பறிபோகும் மாநில உரிமைகள்' விளக்கப் பொதுக்கூட்டம்

11-03-2023 அன்று மாவட்ட தலைவர் மதியழகன் தலைமையில் நைனார்பாளையத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது .

கழக பரப்புரைச் செயலாளர் தூத்துகுடி பால்.பிரபாகரன், தலைமைக் குழு உறுப்பினர் ந.அய்யனார் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்

விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன். கடலூர் மாவட்டத் தலைவர் மதன்குமார், கடலூர் மாவட்டச் செயலாளர் சிவக்குமார். கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் இராமர், மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை, மாவட்டத் துணைச் செயலாளர் வெற்றிவேல், நைனார்பாளையம் நடராஜ், பெரியார் வெங்கட், அசி.சின்னப்பா, தமிழர் பாவலர் கீர்த்தி, பெரியார் பிஞ்சு பாடகர் திராவிட மகிழன், நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டும் கருத்துரையாற்றியும் சிறப்பித்தார்கள்.

தோழர்களும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டு பேசப்பட்ட கருத்துகளை ஆர்வமுடன் கேட்டார்கள்.

## குக்கிராமங்களிலும் பேராதரவு



சின்னஞ்சிறு கிராமங்களிலும் மாநாட்டுக்கு மக்களிடம் பேராதரவு காணப்படுகிறது. கொளத்தூர் அருகே உள்ள உக்கம் பருத்திக்காடு எனும் கிராமத்தில் கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்திய வசூலில் மக்கள் அளித்த தொகை 1 இலட்சத்து 500 ரூபாய்.

தாரமங்கலத்தில் 21ஆம் தேதி மக்கள் அளித்த நன்கொடை ரூ.52,100/-

# நீதித் துறையில் சனாதனம்




● 112 ஆண்டுகால சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு பட்டியல் இனத்தவர்கூட நீதிபதியாக வர முடியவில்லையே என்று கேட்டார் பெரியார். கலைஞர் ஆட்சி நடந்தது; வரதராசன் என்ற தலித் - தலைமை நீதிபதி யானார். பிறகு உச்சநீதிமன்றம் வரை சென்றார்.

### இப்போது நீதித்துறையில் நிலை என்ன?

- நீதித் துறையில் இடஒதுக்கீடுகள் இல்லை; கே.ஆர். நாராயணன், குடியரசுத் தலைவராக இருக்கும்போது மட்டும் இதற்காகக் குரல் கொடுத்தார். அது வெற்றி பெறவில்லை. தற்போது உச்சநீதி மன்றத்தில் தலித் நீதிபதிகள் 2 பேர் மட்டுமே.
- மோடி ஆட்சி பரிந்துரைக்கும் நீதிபதிகளில் ஆர்.எஸ்.எஸ். உணர் வுள்ளவர்களே தேர்வு செய்யப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.க. மகளிர் அணி பொறுப்பில் இருந்த ஒருவர் நீதிபதியாக்கப் பட்டுள்ளார். அவர் இந்தியாவில் வாழும் கிறிஸ்தவர்களை தேசவிரோதிகளாக்கி தனது முகநூலில் பதிவிட்டவர்.
- உச்சநீதிமன்றத்தில் முதல் பெண் நீதிபதி பாத்திமா பீவி, 1989இல் தேர்வு செய்யப்பட்டார். இது வரை உச்சநீதிமன்றத்தில் பெண் நீதிபதிகளாக இருந்தவர்கள் 11 பேர் மட்டுமே (4.2. சதவீதம்). 77 ஆண்டு சுதந்திர இந்தியாவில் முதல் பெண் தலைமை நீதிபதியாகும் வாய்ப்பு தற்போது நீதிபதியாக இருக்கும் பி.வி. நாகரத்தினாவுக்கு 2027இல் தான் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

  இதிலும் **இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் உயர்நீதிமன்றத் தில் 14 பெண்கள் நீதிபதிகளாக உள்ளனர்.**

  அதே வேளையில் பாட்னா, மணிப்பூர், மேகாலயா, திரிபுரா, உத்தரகாண்ட் உள்ளிட்ட 5 உயர்நீதிமன்றங் களில் பெண் நீதிபதிகளே கிடையாது.
- இங்கிலாந்தில் நீதிமன்றங்களில் 32 சதவீதம் பெண்கள். அமெரிக்கா வில் 34 சதவீதம். ஆனால் இந்திய உயர்நீதிமன்றங்களில் 11.5 சதவீதம் மட்டுமே.
- சபரிமலை கோயிலுக்குள் பெண்கள் அனுமதி இல்லை. சனாதனம் மிரட்டுகிறது. இந்துத்துவ ஆட்சி எதிர்க்கிறது. ஆர்.எஸ்.எஸ்.சில் சுயம்சேவக்காக பெண்கள் வரமுடியாது.
- முன்னணி அமைப்புகளை உருவாக்கி அதில் தான் பெண்களை சேர்க்கிறார்கள்; இதுதான் சனாதனம்; இது தான் மனுதர்மம்.

## திருப்பூரில் மகளிர் தின விழா

திருப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 8.3.2023 புதன்கிழமை மாலை 6 மணியளவில் மகளிர் தின விழா திருப்பூர் அம்மாபாளையம் பெரியார் படிப்பகத்தில் கொண்டாடப்பட்டது.

நிகழ்விற்கு சுசிலா அவர்கள் தலைமை ஏற்று பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி முன்னிலை வகித்தார். நஜ்முன்னிசா வரவேற்புரையாற்றினார்.

தொடர்ந்து தோழர்கள் சங்கீதா, வீரலட்சுமி, ஷோபனா ராணி, சகுந்தலா, காயத்ரி ஆகியோர் "பெண்களின் உரிமைகள் பற்றியும் பெரியாரின் பெண் விடுதலை கொள்கைகள்" பற்றியும் கருத்துரை யாற்றினர். நிறைவாக சங்கவி நன்றியுரை ஆற்றினார்.

நிகழ்வில் முத்துலட்சுமி, கௌசல்யா, மனிஷா, திவ்யா, ரூபா, விஜி, காளியம்மாள் மற்றும் பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, வெற்றிமாறன், வெற்றிகொண்டான், ரித்திசாய், ஃபெர்லின் சோபியா, ஷெர்லின் மரியா, மெர்சி, தழல் சிறகன், இயல் ஆழியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கேக் வெட்டப்பட்டது.இரவு உணவாக மாட்டுக் கறி வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th March 2023

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN